**செ.வெ.எண்: 3** **நாள்: 01.09.2016**

## பத்திரிகைச்செய்தி

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களில் +2 பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் 1000 இடங்களைப்பெற்றவர்களுக்கு முதலமைச்சரின் தகுதிப்பரிசுத்தொகை வழங்கும் திட்டம் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பரிசுத்தொகையினைப் பெற 2016 ஆம் ஆண்டு +2 பொதுத்தேர்வில் பெற்றிருக்க வேண்டிய தகுதி மதிப்பெண்கள்(Cut of Mark) குறைந்தபட்சமாக மாணவர்களுக்கு 1078 மற்றும் மாணவியருக்கு 1101 மதிப்பெண்கள் ஆகும். எனவே தமிழை ஒரு பாடமாகக் கொண்டு பயின்று 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற +2 பொதுத்தேர்வில் மேற்கண்ட மதிப்பெண்கள் அல்லது அதற்கு மேலும் மதிப்பெண்களைப் பெற்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவ/மாணவிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் தாங்கள் தொடர்ந்து பயின்று வரும் கல்வி நிறுவனத்தலைவரின் மூலம், அக்கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,(கூடுதல்கட்டிடம்),தரைதளம்,புதுக்கோட்டை என்ற முகவரிக்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம். அதுபோலவே வேறு மாவட்டத்தில் அமைந்துள்ள கல்விநிறுவனங்களில் மேற்படிப்பை தொடந்து வரும் மேற்காணும் குறைந்தபட்ச மதிப்பெண்கள் அதற்கு மேலும் பெற்ற மாணவ/மாணவிகள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரிடம் பரிசுத்தொகைக்காக சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனம் மூலமாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**